47

*The Children's Story-teller No. 1.*

13 OCT 1924

# DANAPALAN

OR

# THE POISONED KNIFE.

BY

**Lalgudi S. KANDASWAMI,**

***Gudiyattam.***

PRINTED AT

THE SANJIVI PRESS, DHARMAPURI.

**1924.**

*istered.]* *[Price As.* 2.

O-12MKL1,D
N24
78375

**மகா-ா-ஸ்ரீ லா. ரா. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்**

என் அன்பின் உறைவிடமே! என் ஹிருதயத்தின் அந்தரங்கத்திலும் அந்தரங்கத்தில், மங்களகரமாய், சூரியதேவனை மான வீற்றிருக்கும் **தெய்வீகம் பொருந்திய எனை பெற்றோர்களின்** ரூபத்தினருகில் எழுந்தருளிக் கொண்டிருக்கும்

**ஸ்ரீமதி. பொன்னம்மாள்**

என்னும் தங்கள் தாயாரின் பக்கத்தில்

**லா. ரா. சாமிநாத ஐயரவர்கள்**

**லா. ரா. நாராயணசாமிஐயரவர்கள்**

என்னும் இரு சகோதரசமேதராய் வீற்றிருக்கும்

**தமது தாய உருவமே நக்ஷத்திரத்தைப் போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.**

---

லா. சே. கந்தசாமி,
ஆசிரியன்,
குடியாத்தம்.

குழந்தைகளின் கதாசிரியன்—1.

13 OCT 1924

# தனபாலன்

அல்லது

# விஷக்கத்தி.

லால்குடி. சே. கந்தசாமி,
உபாத்தியாயர்,
முனிசிபல் ஹை ஸ்கூல்,
குடியாத்தம்.

சஞ்சீவி பிரஸ்,—தர்மபுரி,
சேலம் ஜில்லா.

1924.

Copy Right Registered.] [விலை அணா இரண்டு

3059

## விநாயகர் வணக்கம்.

வீர போற்றி! மும்மலத்தையும் வேரோடு களையுஞ்
சூர போற்றி! துட்டரையடுஞ் சூலங்கை யேந்துந்
தீர போற்றி! நற்றிருவிடை மருதேனச் சிறந்த
ஊர போற்றி! எம்முளத்தவ ரொருவனே போற்றி.

(விநாயக புராணம்.)

## முருகன் துதி.

எம்முளத்திடர்களகற்றிடென்றமர--- ரிரந்திடப் புரந்தர
னேத்த
விம்முளக் கருஞ்சூருடல் பிளந்தடல்—கோள்வேற்
கரத்தந்தணர் வேந்தை
மம்மர்கெட்டோட மலையமாமுனிக்கு—மறைமுதற்
பொருள் வெளியாக்குஞ்
செம்மணித்தண்டை நூபுரக்கழற்பூஞ்—சேவடிச்
சேவகற் றொழுவாம்.

(திருத்தவத்துறை புராண வசனம் முதற்பாகம்.)

## சிவன் வணக்கம்.

ஒருவனே போற்றி! ஒப்பில்
அப்பனே போற்றி! வானோர்
குரு[illegible] போற்றி! எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி!
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிடவேண்டும் போற்றி!
[illegible]கநின் பாதம் போற்றி!—
தமியனேன் றனிமை தீர்த்தே.

(சிவபுராணம்.)

78375
O-12 MKLI,D
N24

# PREFACE.

IT is only as the result of my experiences as a story-teller and school-dramatist in the lower classes of both the boys' and girls' schools that I have understood that the children have a wonderful taste to hear stories and enact interludes illustrating moral truths. In order to supply the youngsters with stories and interludes for which they have a thirst, I have now attempted this small work—of course in harmony with the fourfold objects of story telling and dramatisation *viz.*, (1) establishing good ideals so that, through the force of imagination and suggestion they may provide themselves with an instinct to the right path and right conduct, (2) providing food for imagination, (3) improving the vocabulary of the pupils and lastly (4) testing their powers of expression.

I mean publishing some more books of this type, month by month, for the benefit of both the teachers and the taught for which I crave the hearty co-operation of my co-teachers.

*Gudiyattam,*
1st Sept. 1924.

*The Author.*

## தனபாலன் அல்லது விஷக்கத்தி.

### நாடக பாத்திரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜெயதேவன். | .... | அரசன். |
| 2. | சுபுத்தி. .... | .... | மந்திரி. |
| 3. | தனபாலன். | .... | வைத்தியன். |
| 4. | முதல்பிரபு. | .... | அரண்மனை பிரபுக்கள். |
| 5. | இரண்டாம்பிரபு. | .... | |
| 6. | மனோரமா. | .... | அரசன் தமக்கை |

சமயநாடகர். .... சேவகர்.

நிகழிடம்.—தனபுரி அரண்மனை.

# தனபாலன்

அல்லது

# விஷைக்கத்தி.

இடம் :—அரண்மனையின் கூடம்.

காலம் :—மாலை நான்கு மணி.

கூடத்தின் சுவர்களிலும், மற்றுமவ்வரண்மனையிலுள்ள எப்பொருளிலும்,

ஆயிரம் பொன்பெற்ற, அருமையான
ஒரு நற்புத்தி !
" நுண்ணிய கருமமும் எண்ணித் துணிக,
துணிந்தபின் எண் ணுவ மென்பது இழுக்கு."

என்று பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஜெயதேவன் கட்டிலிற் படுத்தபடியே மயக்கத்திலிருக்கிறான். அவன் பக்கத்தில் மனோரமா உட்கார்ந்துகொண்டு இருக்கிறாள். மந்திரியும், மற்றுமுள்ள பிரபுக்களும் அக்கூடத்தில் இங்கு மங்கும் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

மனோரமா :—[ஜெயதேவன் முகத்தை நன்ருய் உற்றுப் பார்த்து] ஜெயதேவா! [கூப்பிடுகிருள்.] ஜெயதேவா!!—ஜெயதேவா!!! [மந்திரியினிடம்] மந்திரி! அரசர்—என்ன பேசக்காணும் ?

மந்திரி :—[அரசனைக் கூப்பிடுகிருன்.] அரசே!–அரசே!!–

மனோரமா :—ஐயோ–ஜெயதேவா! நானல்லவோ முதலில் இறப்பேன் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அது இப்படி இருந்ததா? யார் கண்டார்கள் அதை ?

மந்திரி :—அம்மணி! அரசர் இம்மாதிரி மயக்கத்தை அடைந்து எத்தனை நாழிகை ஆகிறது? பக்கத்திலேயேதானே நீங்கள் இருந்தீர்கள் ?

மனோரமா :—ஆம், மந்திரி! நான் பக்கத்திலேயே தான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது, அவர் என்னை அழைக்க, நான், 'என்ன சங்கதி?' என்று கேட்டேன். அப்பொழுது, அவர் எனக்குத் தைரியம் சொல்லி, துக்கப்பட்டுக் கொண்டிருந்த என்னைப் பார்த்து, 'அக்கா! ஏன் துக்கப்படுகிருய்?—நான் இறந்துவிடுவேன் என்று நினைக்கிருயா?—நான், இப்பொழுது இறக்க மாட்டேன். இன்னும் கொஞ்சநாள் உயிருடன் இருப்பேன். அதை நம்பு' என்று சொல்லி, 'காலையில் வைத்தியன் என்ன சொன்னுன்?' என்றும் கேட்டார்.

நான், அவர் இன்னும் தைரியப்படவென்று, 'இன்னும்-நான்கு அல்லது ஐந்து தினங்களில் சௌக்கியமாய்விடும்' என்று சொன்னதாகச் சொன்னேன். பிறகு, வேடிக்கையாக, "அரண்மனையில் ஒவ்வொன்றிலும்,

> ஆயிரம் பொன்பெற்ற, அருமையான
> ஒரு நற்புத்தி!
> "நுண்ணிய கருமமும் எண்ணித்துணிக,
> துணிந்தபின் எண்ணுவ மென்பது இழுக்கு."

என்று எழுதப்பட்டிருக்கிறதே! எதற்காக?" என்றும் கேட்டேன். அவர், நான்கு மாதங்கட்கு முன்பு தான் வேட்டையாடிக் காட்டிலிருந்து திரும்பி வரும்பொழுது, வழுவில், ஆயிரம் பொன் அளித்தால் ஒரு நற்புத்தி கூறுவதாக ஒரு தவ சிரேஷ்டர் கூறினதாகவும், அப்படியே அவர் அவருக்குப் பத்து நூறு பொன் கொடுத்து இந்த நற்புத்தியை வாங்கிக் கொண்டு வந்ததாகவும், விலை பெற்ற அப்புத்தி, தன் கண்களின் முன் எப்பொழுதும் புலப்படவென்றே எவ்வெப்பொருளிலும் எழுதிவைக்கக் கட்டளை இட்டதாகவும் கூறினர். அதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. அதைக் கண்ட அவர், அப்பொழுது, என் மேல் கடுங்கோபங்கொண்டு, சிரிப்பது என் முட்டாள்தனம் என்றும், பெரியோர் சொற்படி

நடக்கவேண்டுமென்றும் கூறினர். இதை அவர் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, கொஞ்சங் கொஞ்சமாய் அவர் முகம் மாறிற்று. எனக்கு அவ்வளவுதான் தெரியும். [மறுபடியும் ஜெய தேவனை உற்று நோக்கி] ஐயோ! வாயிலிருந்து வெண்ணுரை வெளி வருகின்றதே! [மந்திரியைப் பார்த்து] மந்திரி! எனக்குப் பயமாய் இருக்கிறதே! [துக்கத்தால் அழுதுகொண்டே] அமைச்சரே!—மந்திரி!!—அரசர் பிழைத்து எழுந்திருப்பாரா? எழுந்து, என்னுடன், உயிரோடு இன்னும் ஒரு வார்த்தையாவது, அவனுடன் பேசுவாரா? [இரண்டு கைகளையும் விரித்து, ஆகாசத்தைப் பார்த்து, பகவானைஸ் துதித்து] ஓ ஈசா! [பெருமூச்சு விட்டு] ஐயோ! என்னுயிர் போய்விடலாகாதா?

மந்திரி:—அம்மணி! ஏன் வீணாகத் துக்கப்படுகிறீர்கள்? அரசருக்கு இப்பொழுது ஒரு சங்கடமுமில்லை. மயக்கத்திலிருக்கிறார். இன்னும், அரை நாழிகையில் எழுந்துவிடுவார். அதைரியப்படாதேயுங்கள்.

மனோரமா:—ஏதோ ஈஸ்வரன்தான் காப்பாற்றவேண்டும்.

[மெதுவாக, அரசன் கால்களைப் போர்த்திருந்த வஸ்திரத்தை அகற்றிக் கால்களைத் தொட்டுப் பார்க்கிறாள்.]

ஐயோ! மந்திரி! இனி, அரசர் பிழைத்தெழுவார், என்ற நம்பிக்கையை விட்டுவிடவேண்டியதுதான்.

ஐயோ! இதோபாரும்! கால்களும் சில்லிட்டுப் போய்விட்டன. இனி தாமதம் செய்யலாகாது. வைத்தியருக்குச் சொல்லி அனுப்பி இருக்கிறீர்களா?

மந்திரி :—அரசர் மயக்கத்திலிருக்கிறாரல்லவோ—அப்படித் தானிருக்கும். நானும், அப்பொழுதே வைத்தியருக்கு ஆள் அனுப்பியிருக்கிறேன். வைத்தியரைக் கூட்டிக்கொண்டு சேவகன் வரும் நேரம் ஆகிவிட்டது.

மனோரமா :—[துக்கத்துடன்] அவர் வந்துதான் என்ன ஆகப்போகின்றது? கடவுள் கிருபை வைத்தால் தான், என் தம்பியார் பிழைத்து எழமுடியும். [மறுபடியும் அரசனைக் கூப்பிடுகிறாள்.]

ஜெயதேவா!—ஜெயதேவா!! * * *

உன் தலையில் இவ்வாறு எழுதியிருந்தது இருபத்தி ஏழாவது வயதில் பிராணனை இழக்கவேண்டி?—ஐயோ! உன் வலக்காலில் வந்த இரணமே உனக்கு எமனாய்த் தோன்றிற்று? அடா என் செல்வமே! தாய்தந்தையரையும், கணவனையும் இழந்த துக்கம், உன்னைப் பார்த்துக் கொண்டுவருவதனால் மறைந்து வந்ததே. அடா பாபி! பாபிகளிலும் பாபியான என் கண்கள் முன்பா நீ இறக்கவேண்டும்?—

மந்திரி :—கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற ஆசை அவருக்கு அதிகமாய் இருந்தது. தன்னுடைய மனைவி என்று ஒரு பெண்ணைக் கொண்டு,

குடித்தனம் செய்யவேண்டுமென்று அவருக்கு உண்டான ஆசை, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. அடிக்கடி, ' "சம்சார சாகரமக்கம்" என்று சொல்லுகிறார்களே. அது எவ்விதம் இருக்கும்?' என்று என்னைக் கேட்பார். நான், 'அனுபவித்தால் தான் தெரியும்' என்பேன். அதை அறிவதற்காக வாயினும் கல்யாணம் புரிய வேண்டும், என்று அவா கொண்டிருந்தார். அதைத் தீர்த்துக்கொள்ளவேதான் போன ஆண்டு அம்மணியாரைக் கல்யாணம் செய்துகொண்டார்.—தன் ஆசையை முற்றிலும் அனுபவிக்க அவருக்கு ஆவல் அதிகம் உண்டு.

மனோரமா :—ஐயோ! தன் ஆசைதீர ஒரு அழகிய பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கொண்டாரே. அவள் மூலமாய் ஒரு பிள்ளைக்குழந்தையைப் பெற்று எடுத்து, வளர்த்தாவது, உயிர்விட்டால் தான் எனக்குத் திருப்தியாயிருக்கும். அவர் நெஞ்சமும் வேகும். [யோசித்து] என்ன காரணம்? ஏன் இன்னும் வைத்தியர் வரவில்லை?

"தனபாலன்" வருகிறான்.

மந்திரி :—அம்மணி! வைத்தியர், அதோ வருகிறார்.

மனோரமா :—[முன்சென்று] வாருங்கள்—வாருங்கள்! ஐயா, தெய்வம் போல் தாங்கள் சமயத்தில் வந்தீர்கள். தங்கள் வரவு நல் வரவு ஆகுக. தயவுசெய்து

இவ்வாசனத்தில் எழுந்தருளும். [ஒரு நாற்காலியைக் காட்டுகிறாள்.]

தனபாலன் :—[நாற்காலியை மெத்தைக் கருகில் போட்டுக் கொண்டு, அதில் உட்கார்ந்து,] நல்லது! [அரசனை உற்றுநோக்கி, மனோரமாவைப் பார்த்து] அம்மணி! அரசர் இம்மயக்கத்தை அடைந்து எவ்வளவு நேரம் ஆகின்றது?

மனோரமா :—அரைநாழிகைநேரம் ஆகின்றது.

தனபாலன் :—நீங்கள், கூப்பிட்டுப் பார்த்தீர்களா?

மனோரமா :—நாங்கள் பலதடவைகள் கூப்பிட்டுப்பார்த்தோம். வாயை அசைக்கவும் இல்லை.—இவ்வுலகத்தின் ஞாபகமே அற்றுப் போயிற்று.... .... ....
வைத்தியரே! என் தம்பியார் பிழைத்தெழுவாரா?

தனபாலன் :—[புன் சிரிப்புடன்,] இது என்ன இவ்விதம் கேட்கின்றீர்கள்! அவருடம்பில் இப்பொழுது ஜுரமே இல்லை. காலையில் இரணத்தைக் கீறிவிட்டதனாலுண்டான வலியின் வேகத்தால் மயக்கத்திலிருக்கிறாரே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. இதோ வெகு சீக்கிரத்தில் எழுந்துவிடுவார். [அரசனைக் கூப்பிடுகிறான்.] அரசே! அரசே!! [ஜெயதேவன் கைகால்களை மெதுவாக அசைக்கிறான்.]

மனோரமா :—கைகால்களைக்கூட அசைக்க முடியாமல் கிடந்தார். ஏதோ ஜகதீசன் பிரத்தியக்ஷமானாற்போல்

தாம் வந்தீர்கள். அவர் உயிரை உங்கள் கையில் ஒப்புவித்தோம். ரக்ஷித்தாலும் சரி—பக்ஷித்தாலும் சரி—. எதற்கும் உங்களைத்தான் முழுவதும் நம்பி இருக்கிறோம்.

தனபாலன் :—ஒன்றும் அறியாப் பேதையாகிய என்னால் என்ன செய்யமுடியும்! ஆண்டவனருளாற்றான் எல்லாம் சித்தி அடைகின்றது. [பின்னும் அரசனைக் கூப்பிடுகிறான்.] அரசே! அரசே!! அரசே!!!

ஜெயதேவன் :—[மெதுவாக மொக்குகிறான்.]—உம்ம்ம்........

மனோரமா :—மொக்குகிறார் போலிருக்கிறதே.

தனபாலன் :—ஆம். [கை அமர்த்தி] சற்றுப் பேசாமல் இரும்.—அரசே! நான் வந்திருக்கிறேன்.— தனபாலன்.—

ஜெயதேவன் :—ங்ஆஆஆ!—

தனபாலன் :—நான்தான் தனபாலன். இங்கே! கண்விழித்து என்னைப் பாரும்.

ஜெயதேவன் :—[மொக்கிக் கொண்டே] அக்கா ஆஆஆ!—

மனோரமா :—என் கண்ணன்னே! ஜெயதேவா! [அவனுடன்] என்னடா வேணும்? நீ உயிர்த்தெழுந்தாயா? கண்ணே! இங்கே கண்விழித்து என்னைப் பார்.

தனபாலன் :—அம்மணி! கொஞ்சம் பால் கொண்டுவரச் சொல்லுங்கள். அரசர் நா, உலர்ந்து போயிருக்கும்.

ஜெயதேவன் :—[கண்விழித்து] அக்கா! அக்கா!! [மெது வாகத் தனது வலதுகையை மனோ ரமாவின் மடியின்மீது வைத்து, அவள் முகத்தை உற்று நோக்கு கிறான்.]

மனோரமா :—கண்ணே ஜெயதேவா! பாவி—என் முகத் தைப் பார்க்கவேண்டாமென்று, இவ்வளவு நாழி கை கண்களை மூடிக்கொண்டிருந்தாயா? [சேவ கன் பால் கொண்டு வருகிறான்.]

ஜெயதேவன் :—அக்கா! [கண்ணீர் வடிக்கிறான்.]

மனோரமா :—கண்ணே! ஏன் அழுகிறாய்? அழாதே. [தன் வஸ்திரத்தால் அவன் கண்ணீ ரைத் துடைத்து,]

பால் கொண்டுவந்திருக்கிறேன். குடிக்கின்றாயா? [ஜெயதேவன் வாயைத் திறக்க, மனோரமா, கொஞ்சம் கொஞ்சமாய் அவன் வாயில் பாலை ஊற்றுகிறாள்.]

தனபாலன் :—அரசே!

மனோரமா :—ஜெயதேவா! அதோ வைத்தியர் வந்திருக் கிறார். உன்னைக் கூப்பிடுகின்றார்.

ஜேயதேவன் :—(வைத்தியரைப்பார்த்து) நான் பிழைப் பேனு?

தனபாலன் :—இதென்ன தாங்கள் இப்படிப் பயப்படுகி றீர்கள்? தாங்கள் பயப்படவேண்டாம். தைரிய மாய் இருங்கள்; காயம் ஆறிக்கொண்டே வருகி றது. இரணத்தைப் பரிசோதிக்கவேண்டுமாகை யால் சற்று மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொள்ளுங்கள். [ஜெயதேவன் மெதுவாக எழுந் திருக்கிறான்.]

அச் சாய்வான கட்டிலில் உட்கார்ந்தால், காயத் திற்கு மருந்து வைத்துக் கட்ட சௌகரியமாயிருக் கும். [அங்கிருந்த சாய்வான கட் டிலில் அரசன் அமர்ந்து, காயம் பட்ட காலை மட்டும் தூக்கி, ஒரு முக்காலியின்மேல் வைக்கிறான். வைத்தியர் கட்டை அவிழ்த்துக் காயத்தைப் பரிசோதிக்கிறார்.]

மனோரமா :—வெட்டுக்காயம் ஆறிக்கொண்டே வருகிறதா?

தனபாலன் :—[நன்றாய்ப் பரிசோதிப்பவன்போல் பார்க் கிறான்.]

ஜேயதேவன் :—அக்கா! அவசரப்படாதே! பார்த்துத் தானே சொல்லவேண்டும்.

தனபாலன் :—அம்மணி! கொஞ்சம்—புரை—கண்டிருக் கிறது.

மனோரமா:—வைத்தியவிஷயம் எங்களுக்கு என்ன தெரியும்? அவர் உயிரைத் தங்கள் கையில் ஒப்புவித்தோம்; நீங்கள் என்ன செய்வீர்களோ, எனக்குத்தெரியாது. கூடியசீக்கிரத்தில் சௌக்கியப்படுத்தவேண்டியது உங்கள் கடமை ஆகும். அதுவிஷயத்தில் எவ்வளவு செலவு ஆனாலும் ஆகட்டும்.

தனபாலன் :—அரசே! மறுபடியும் புரை ஓடியிருப்பதனால், இன்னும் கொஞ்சம் கீறித்தான் காயத்தை ஆற்றவேண்டியதாயிருக்கிறது. அப்படிச் செய்யாமற்போனால், புரை தேகம் முழுவதும் பரவி உயிருக்கே சேதத்தை உண்டாக்கினாலும் உண்டாக்கலாம். ஆகையினால் தாம் என்ன சொல்லுகிறீர்கள்? தாங்கள் இஷ்டப்பட்டு உத்தரவு கொடுத்தால், நான் கீறிவிடத் தயாராயிருக்கிறேன்.

ஜெயதேவன் :—உமக்கு என்ன இஷ்டமோ அப்படியே செய்யும். என் தமக்கை கூறியவண்ணம் என் உயிரை உம்மிடமே ஒப்புவித்தோம். மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமலும், வைத்தியமுறையில் உண்டாகும் செலவைப்பற்றி யோசிக்காமலும், செய்யவேண்டியதைச்செய்யும்..........கடைசியில், கடவுள் இஷ்டம்போல், நடக்கிறபடி நடக்கட்டும் [மனோரமாவைப் பார்த்து] நான் சொல்வது சரிதானே, அக்கா?

மனோரமா :—ஜெயதேவா! என்ன, நீ இப்படி அதைரியப்படுகிறாய்?

78331
O-12MKLI, N24

**ஜெயதேவன் :**—[விசனத்துடன்] அக்கா ! உம் திரு முகத்தை இன்னும் கொஞ்சநாள் காண்பதற்கும், நான் பலதடவைகள் நினைத்தவாறு, குடும்ப ஆழியின் ஆழத்தைக் கண்டு செல்வதற்கும், நம் தகப்பனார் நமக்காகத் தேடிவைத்த தனத்தை அனுபவிப்பதற்கும், இப்பரந்த புவியிலுள்ள மனிதர்களை ஒரே சந்திரவட்டக் குடையின் ஆட்சிசெய்வதற்கும் நான் பாக்யம் பண்ணியிருந்தால்—ஒருவேளை—பிழைத்து எழுந்திருப்பேனே—என்னவோ. [ஒரு பக்கம் சாய்கிறான்.]

**மனோரமா :**—ஜெயதேவா ! ஏன் அதைரியப்படுகிறாய் ? காயம் கண்டவர்கள் எல்லாரும் காயத்தைக் கழற்றி எறிகின்றார்களா—என்ன? நம் வைத்தியர் நல்ல மருந்து வைத்துக் கட்டிக் கூடிய சீக்கிரத்தில் சௌக்கியம் செய்து விடுவார். பயப்படாதே! தைரியமாயிரு! கடவுள் எப்பொழுதும் நம்மைக் கைவிட மாட்டார் என்பதை நம்பி, அவரை நினைத்து ஸ்தோத்திரம் செய்!

**ஜெயதேவன் :**—அக்கா ! யார் என்ன செய்தால் தான் என்ன ? உயிரைக் கொடுக்கக் கடவுளால் அல்லாமல், கேவலம், மனிதரால் முடியுமோ? அக்கா ! எனக்குள் நான் பிழைப்பேன் என்றே தோன்றவில்லை. உண்மையில், நான் பிழைப்பவனாயிருந்தால், என் இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே பிழைத்து, எழுந்து இருந்திருக்க மாட்டேன்!

ஐயோ!—அக்கா!! [பெருமூச்செறிந்து] முன் ஜன்மத்தில், பாபியினும் பாபியாகிய நான், எவருக்கு, எவ்விதத் துன்பத்தை விளைவித்தேனோ அறியேன். அதற்குத் தகுந்த பலனை, இப்பொழுது அனுபவிக்கிறேன். ஆனால், இப்பிறப்பில்—அக்கா!—என் மனச் சாக்ஷிக்கு விரோதமில்லாமல் கூறுகிறேன்.—ஒருவருக்கும் தீங்கை நினைக்கவும் இல்லை. செய்யவும் இல்லை. இப் பரந்த புவியில், என்னை வெறுப்பவர் ஒருவரும் இல்லை என்று, நான் நிச்சயமாய்ச் சொல்வேன்.

மனோரமா:—வீணாய் வருத்தப்படாதே! ஊக்கத்தைக் கைவிடாதே! எதற்கும் பிராப்த காலம் வேண்டும்.

தனபாலன்:—அரசே! நான் ஆரம்பம் செய்யலாமா?

ஜெயதேவன்:—செய்யும்.

தனபாலன்:—நான் தங்கள் காலைக் கீறும் காலத்தில், தாங்கள் பார்த்துக் கொண்டே இருப்பின், தங்களுக்கு நடுக்கமும், பயமும், வருத்தமும் உண்டாகலாம் ஆகையினால், தம் கண்களைச் சற்றுநேரம் மறைத்துக் கட்டினால் சௌகரியமாயிருக்கும்.

ஜெயதேவன்:—வேண்டாம்! வேண்டாம்!! என் கண்களைக் கட்டவே வேண்டாம். இறக்கப் பயப்படுகின்றவனுக் கன்றோ பயமும், வருத்தமும், வலியும் உண்டாகும். எனக்குப் பயமும், வருத்தமும்,

வலியும் சிறிதேனும் உண்டாகாது. ஆகையினால் பயப்படாமல், தாங்கள் தங்கள் வேலையை ஆரம்பியுங்கள்............பாதத்தில் பாதி கீறி ஆகிவிட்டது. பாதம் முழுவதும கீறினாலும், அல்லது பாதத்திற்கு மேல் காலிலும் கத்திவைத்தாலும் நான் அஞ்சேன்! அஞ்சேன்!! ஆனால் ஒரு விஷயம். நுண்ணிய கருமமும் எண்ணித்துணிக என்பதுபோல், தாம் செய்யப் போகிற காரியத்தை யோசித்துச் செய்யும். 'செய்தபின் யோசித்துக்கொள்வோம்' என்று ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தல் சரியல்ல. மேலும், தாம் கீறுவதற்கு முன்பு, வேண்டிய சாமான்களைத் தயாரித்துக்கொள்ளும். மந்திரீ! வைத்தியர் கேட்கும் சாமான்களைக் கொடும்.

தனபாலன் :—[மந்திரியை நோக்கி] ஒரு பாத்திரத்தில் சுத்த தண்ணீரும், உதிரத்தை ஏந்த ஒரு பாத்திரமும் வேண்டும்.

[மந்திரி உள்ளே போகிறார். அவர் தலை மறைந்ததும தனபாலன் தன் சட்டைப் பையிலிருந்து சில சீசாக்களை எடுத்துக் கீழேவைத்து, எழுந்து ஒரு ஓரம் செல்லுகிறான்.]

தனபாலன் :—[பையிலிருந்து விஷக்கத்தி ஒன்றை எடுத்து] இவ்விஷக்கத்தியே—அரசன் உயிரை வாங்கப் போகின்றது. ஏகத்தியே! உன்னால் அரசன் உடம்பைக்கீறி, உன்மேற் பூசப்பட்டிருக்கும் நஞ்சை,

அவன் இரத்தத்தில் கலக்கத் தக்க காலம்—எப்பொழுது வாய்க்கும்? எப்பொழுது வாய்க்கும்?—என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன். அப்பேர்ப்பட்ட காலம் நமக்கு இன்றே வாய்த்தது. [சுவற்றில் நற்புத்தியைப் பார்த்து,] ஆ! இங்கு என்ன எழுதி இருக்கிறது? [வாசிக்கிறான்.]

> ஆயிரம் பொன்பெற்ற, அருமையான
> ஒரு நற்புத்தி !
> " நுண்ணிய கருமமும் எண்ணித்துணிக,
> துணிந்தபின் எண்ணுவ மென்பது இழுக்கு."

'எவ்வளவு சிறிய காரியமாயிருந்தாலும் யோசனை செய்து, காரியத்தைமுடி. முன்யோசனை இல்லாமல் காரியத்தை ஆரம்பித்தல் பிசகாகும்' என்றல்லவோ எழுதியிருக்கிறது. [யோசித்து] ஆகாகா! யோசிக்காமல், பணத்தாசை கொண்டு, பிரபுக்கள் பேச்சை நம்பி, என்ன காரியம் செய்யத் துணிந்தோம்! நாம் அரசன் காயத்தைக் கீறுவதற்கு இவ்விஷக்கத்தியை உபயோகிப்போமேயானால், என்ன நேரிடும்? அவ்வரசர் உயிர் விடுவாரன்றோ? அரசர் உயிரிழந்தால் நம் கதி என்ன ஆகும் என்பதை நாம் எண்ணாமற் போயினோமே!...............
"இராமன் ஆண்டால் என்ன?- இராவணன் ஆண்டால் என்ன ?" என்பதுபோல், ஜெயதேவன் ஆண்டால் என்ன? ஜெயபாலன் ஆண்டால் என்ன ? * *

ஜெயபாலன் கைக்குள் அடங்கிய பிரபுக்கள் எல்லா ரும், இக்காரியத்தைச் செய்து முடித்தால் இணையில்லாத செல்வம் ஈவதாகச் சொல்லி இருக்கிறார்களே! குடிக்கக் கூழுக்குக் காசில்லாமல், கை கொட்டிக் கோவணாண்டிகளாய்த் திரியும் இக் காலத்தில், பணமன்றோ பெரியது. பணமில்லாத வன் எதற்குச் சமானம் ஆனவன். பணமில்லாத வன் பிணமாவான். பணமில்லாதவனைப் பல்லியும் சேராது.

கல்லாரேயானாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்ததாய்வேண்டாள்.
செல்லாதவன் வாயிற் சொல்.

ஆகையினால், நாம், இவ்விஷசக்தியை உபயோகித்து, வேண்டிய பணத்தை அடைய வேண்டும்.—

ஜெயதேவன்:—[வைத்தியனை நோக்கி] வைத்தியரே! [மந் திரி, தனபாலன் கேட்டவைகளைக் கொண்டுவந்து வைக்கிறான்.]

தாம் கேட்டவைகள் வந்து விட்டன.

தனபாலன்:—இதோ! ஆரம்பித்தேன்.

ஜெயதேவன்:—இன்னும் ஒரு முறை சொல்லுகிறேன் ஜாக்ருதையாய் செய்யும். முன் யோசனையும் இருக்கட்டும்.

[ஏதோ சந்தேகம் கொண்டு தனபாலனை உற்றுப் பார்க்கின்றார்.]

தனபாலன் :—அப்படியே! [வேலை ஆரம்பிக்கிறான். அப்பொழுது அரசன் படுக்கைக் கட்டிலில் எழுதப்பட்டிருந்த கற்புத் தியைக் கண்டு, தனக்குள் யோசிக்கிறான்.]

இது என்ன! [வாசித்து] இதிலும் அப்படியே இருக்கிறது. [அரசன் காலைவைத்த முக்காலியி லும் அதே கற்புத்தியைக் கண்டு,] இதில் கூடவா? [இன்னும் எந்தப் பாத்திரத்திலும் அதையே கண்டு] இவைகளிலுமா? ஆகாகா! [பரபரப்புடன்] யோசிக்காமல் என்ன காரியம் செய்பத்துணிந் தோம்! [கைகால்கள், பயத்தினால் நடுங்கு கின்றன.]

ஜெயதேவன் :—வைத்தியரே! என்ன? தம் கைகால்கள் நடுங்குகின்றன. தைரியமாயிருங்கள்! அரசன் ஆக்கை என்று அல்லலுற வேண்டாம்.

தனபாலன் :—[வாய் குழற] இல்—லை. பு—ரை— — — வெகு தூரம்—ஓடி [நான்கு புறங்களும் சுற்றி நோக்கி]— இருக்கிறது.

ஜெயதேவன் :—பாதகமில்லை. பயப்படாமல், நிதான மாய்ச் செய்யுங்கள்.

தனபாலன் :—[அரசனுக்குப் பின்புறம் தொங்கிக்கொண்டிருந்த படுதாவிலும் அதே கற்புத்தியைக் கண்டு, மனதிற்குள்] ஆகா !—கா !!—கா !!! எங்கும் அதே கற்புத்தி ! [பாபரப்புடன், தான் கையில் வைத்திருந்த விஷக்கத்தியைப் பையில் போட்டுவிட்டு, தான் ஏற்கனவே கொண்டு வந்திருந்த. வேறு நல்ல கத்தியைப் பையினின்றும் எடுக்கிறான்.]

ஜேயதேவன் :—[வைத்தியன் கத்தி மாற்றுவதைக்கண்டு] வைத்தியரே ! இப்பொழுது என்ன செய்தீர் ?

தனபாலன் :—ஒன்றுமில்லை. அந்தக் கத்தியை வைத்துவிட்டு, வேறு கத்தியை எடுத்தேன். [காயத்தைக் கீற முயலுகின்றான்.]

ஜேயதேவன் :—வைத்தியரே ! நிறுத்தும் !! நிறுத்தும் !! தமது வைத்தியம் போதும் ! போதும் !! கத்தியைத் தாம் மாற்றக் காரணம் என்ன?

தனபாலன் :—[நாத் தடுமாற] முதலில் எடுத்த கத்தி, போதுமான கூர்மையாயில்லாததால் கூர்மையான இக் கத்தியை எடுத்தேன். [முழிக்கின்றான்.]

ஜேயதேவன் :—[கோபத்துடன்,] உண்மை தானா ?

தனபாலன் :—ஆம் உண்மைதான்.

ஜேயதேவன் :—அப்படியாயின் முதலில் எடுத்த கத்தியை எடும்!

தனபாலன் :—[மூழித்தவண்ணம் நின்று கொண்டிருக்கிறான்.]

ஜெயதேவன் :—[மந்திரியைப் பார்த்து]. மந்திரீ! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. .... .... ....

.... .... .... .... .... .... ....

[பிரபுக்கள் தனியாய் ஒரு மூலையில் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.]

முதல் பிரபு :—இது என்ன! அந்தப்பயல் சமாசாரத்தை வெளியிட்டுவிடுவானா—என்ன?

இரண்டாம் பிரபு :—யார்? தனபாலனா? நம் தனபாலனா? ஒருக்காலும் மாட்டான். பயப்படாதே! அவன் தேகத்தில் உயிருள்ள வரையில் அவன் சமாசாரத்தை வெளியிடமாட்டான்.

.... .... .... .... .... ....

ஜெயதேவன் :—.... .... எடு—மறைத்த கத்தியை! [தன் கத்தியை உருவி] எடுப்பாயா? மாட்டாயா?

தனபாலன் :—இல்லை—இல்லை—ஒன்றுமில்லை.

ஜெயதேவன் :—அடா துஷ்டா! எடு கத்தியை! [கத்தியை ஓங்கி] உள்ளதை உள்ளபடி உரைத்துக் கொடு அதை,- [வைத்தியனை வெட்டப் போகிறான்.]

மனோரமா :—[ஜெயதேவனைப் பிடித்துத் தடுத்து] ஜெயதேவா! இந்தக் காலுடனா எழுந்திருப்பது? கால் வலிக்கப்போகின்றதே. உட்கார். என் கோபம் கொள்ளுகிறாய்? கோபத்தைத் தணித்துக் கொள்.

ஜெயதேவன் :—அக்கா! தங்களுக்குத் தெரியாது ஒரு சங்கதியும் இது விஷயத்தில். இவனே!—இங்கே நம் கண்களுக்கு முன்னால் நின்று கொண்டிருக்கும் இவனே!—என் எமன். இவன் மறைத்த அக்கத்தியில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதனாலேதான், இவன் கத்தியைக் காட்ட மறுக்கின்றான். [வைத்தியன் குடுமியைப் பிடித்துக் குலுக்கி]

அடேய்! கடைசியாகக் கேட்கிறேன். கத்தியைக் காட்டி, உண்மையை உரைப்பாயா? மாட்டாயா?

முதல் பிரபு :—[இரண்டாம் பிரபுவோடு, இரகஸ்யமாய்] தனபாலன் சொல்லிவிடுவான் போல் இருக்கிறதே.

இரண்டாம் பிரபு :—ச்சைட்! வாயை மூடு.

மந்திரி :—அரசே! அவசரப்படவேண்டாம். 'துண்ணிய கருமமும் எண்ணித்துணிக' என்பதை மறந்தீர் போலும். அவசரப் பட்டு அவரை வெட்டிவிடுவதனால் நமக்கு என்ன லாபம் வந்துவிடப்போகிறது? மரியாதையாகக் கத்தியைக் கொடானாயின, வாங்குகிற விதமாய் வாங்குவோம். [சேவகரை நோக்கி] வாங்குங்கள் அக்கத்தியை! [சேவகர், பலாத்காரமாய் விஷக்கத்தியை வைத்தியர் சட்டைப் பையினின்றும் எடுத்து வேந்தனிடம் கொடுக்கிறார்கள்.]

ஜெயதேவன் :—[அக்கத்தியை உற்று நோக்கி, மோந்து பார்த்து,] விடாதே அக்கள்வனை! பிடித்துக் கொள்ளுங்கள் நன்றாய் அக் கொலைபாதகனை! [மனோரமாவைப் பார்த்து] அக்கா! பார்த்தனையா இவ்விஷக்கத்தியினை! இக் கொடியவனை—என் உயிரை இரக்ஷிக்கஅன்றி பட்சிக்கவந்த இக் கொடியவனை—என் செய்வது? தான் விஷக்கத்தி உபயோகிப்பதை, நான் அறிந்து விடுவேன் என்று பயந்தே, கண்களைக் கட்டவேண்டும் என்று கபடமாய்க் கூறினான் போலும். [தனபாலனைப்பார்த்து] ஹே! இராஜத்துரோகி! என்னைக் கொல்லவேண்டும் என்ற எண்ணம் உன் மனத்தில் தோன்றுமாறு, நான் உனக்கு என்ன கெடுதலைச் செய்தேன்? எந்தக் காரணத்தால் என்னைக் கொல்ல முயன்றனை? பின்பு, எந்த எண்ணம், உன் மனத்தில் சூரிய உதயம்போல் உதித்து, உன் முயற்சியை வீணாக்கிற்று? ஒன்றையும் ஒளிக்காமல் கூறு.

தனபாலன் :—அரசே! ஒரு மர்மமும் இல்லை.

இரண்டாம் பிரபு :—[முதல் பிரபுவினிடம்] நான் சொன்னேன் பார்த்தாயா? அவன் ஒருக்காலும் மெய்யைக் கூறமாட்டான்.

முதல் பிரபு :—ஆம்-ஆம்—. இவ்வளவு வேலை அவனா செய்கிறான்? நாம் கொடுத்த பணமல்லவா அவ்வேலையைச் செய்கிறது!

ஜெயதேவன் :—என்ன சும்மா இருக்கிறாய்? உள்ளவிஷயங் களை உள்ளபடியே கூறினால் உன் உயிர் தப்பும். இல்லாவிடில் என்ன நேரும் என்று நீயே யோசித் துக் கொள்வாய். ஏ வைத்தியரே! என் உயிரைச் சாப்பிடவந்த இப்பசியுள்ள விஷக்கத்தி, உம் முடைய உயிரைச் சாப்பிட்டுத்தன் பசியைத் தீர்த் துக் கொள்ளும் என்று நம்பும்.

தனபாலன் :—வேந்தர் வேந்தே! நான் தம்மிடம் உண்மை யைச் சந்தேகமில்லாமல் சொல்லிவிடுகிறேன். ஆயினும், நான், தம்முடைய அசனமனையைத் தாண்டி, வாசலில் காலை வைப்பதற்கு முன்னால் என் தலை என் உடலைவிட்டுப் போய்விடும். ஆகை யினால், எனக்கு வாசற்படியினருகில் காத்திருக்கும் கத்தியினின்றும் காப்பாற்றுவதாகச் சத்தியம் பண் ணினால், ஒன்றையும் விடாமல் உடனே கூறுகி றேன்.

முதல் பிரபு :—[இரண்டாம் பிரபுவினிடம்] அடாடா! இதேதடா! அவஸ்தையாயிருக்கிறது? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாகி விடுமோ என்னவோ தெரியவில்லையே! ஐயையோ—உண்மை யைச் சொல்லிவிடுவான் போலிருக்கிறதே.

இரண்டாம் பிரபு :—ஐஐயோ! விழுந்தது இடி!

ஜெயதேவன் :—[யோசித்து,] ஓகோ!............தெரிந்தது. வைத்தியரே! இதோ! என் வீரக் கழலின் மீது